<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

OS No:  26/2018

2025-ம் ஆண்டு  ஏப்ரல் மாதம் 24 ம் நாள் Pw1  தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள்  24.04.2025.

Pw1 (பாலகிருஷ்ணன்)

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

<u>**1** முதல் **3** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

தாவா சொத்து பிரதிவாதிகள் விற்பதாக கேள்விப்பட்டு எந்த தேதியில் அவர்களை நான் முதலில் சென்று சந்தித்தேன் என்றால் அந்த தேதி எனக்கு நினைவில்லை , ஒப்பந்தம் செய்த தேதி தான் நினைவுள்ளது.  இரண்டு, மூன்று முறை நான் சென்று பார்த்தேன். ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு முன்பு தாவா சொத்தை நான் நேரில் சென்று பார்த்தேனா என்றால் ஆமாம் . ஒப்பந்தம் செய்த சமயம் தாவா சொத்தின் guideline value என்னவென்று ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. சொத்தின் விஸ்தீரணம் ஞாபகம் உள்ளதா என்றால் 1442 சதுர அடி.  சொத்தின் செக்குபந்தி ஞாபகம் உள்ளதா என்றால் ரோட்டிற்கு வடபுறம் உள்ளது மற்ற திசைகளில் யார் யார் வீடுகள் உள்ளது என்று ஞாபகம் இல்லை. தாவா சொத்தில் உள்ள வீட்டை எத்தனை முறை சென்று பார்த்தேன் என்றால் ஒரே ஒரு முறை சென்று பார்த்தேன். ஒப்பந்தத்தின் காலக்கெடு என்னவென்று சொல்ல முடியுமா என்றால் ஒரு வருட காலமாகும். 15.9.2017 முதல் 14. 9. 2018 வரையிலும் ஆகும்.  நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் வயரிங் தொழில் செய்கிறேன்.  வருமான வரி செலுத்துகிறேன் என்றால் என்றால் ஆமாம்.  பிரதிவாதிக்கு கொடுத்ததாக சொல்லும் அட்வான்ஸ் தொகை எனக்கு திரும்ப வராமல் நிலுவையில் உள்ள விவரத்தை என்னுடைய வருமான வரி கணக்கில் காண்பித்துள்ளேன் என்றால் இல்லை.

ஒப்பந்த செய்வதற்கு முன்பு வில்லங்க சான்றிதழ் பெற்று பார்த்தேனா என்றால் ஆமாம். அந்த வில்லங்க சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம்.  வில்லங்க சான்றிதழில் தாவா சொத்தை யார் பெயரில் இருந்தது என்றால் ஈஸ்வரமூர்த்தி பெயரில் இருந்தது. ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு முன்பு வழக்கறிஞரிடம் கருத்து எதுவும் பெற்றேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண் சரியாக நினைவில்லை 446 என்று நினைக்கிறேன்.

தாவா சொத்தை நான் கிரயம் வாங்குவதற்கு முன்பு யாருக்கேனும் ஆட்சேபணை உள்ளதா என கேட்டு பேப்பர் விளம்பரம் எதுவும் செய்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தை ஈஸ்வரமூர்த்தியின் பெயர்தான் இருக்கிறது என்று வில்லங்கத்தை பார்த்து தெரிந்து கொண்ட பின்பும் எதற்காக அவருடைய மகன் மற்றும் மகளிடம் ஒப்பந்தத்தில் கையொப்பம் வாங்கினேன் என்றால் அவர்கள் இருவரும் மேஜர் மேலும் நாளைக்கு அவர்களிடமிருந்து எந்த பிரச்சினையும் எழக்கூடாது என்ற காரணத்தினால் அவர்களிடமும் கையொப்பம் வாங்கினேன். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிரையை நான் படித்து பார்த்தேன் என்றால் ஆமாம்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishna Priya, 28.4.25
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS